**பத்திரிக்கை செய்தி**

## இருநாட்களும் வெற்றிகரமாக நடைபெற்ற போராட்டம்

BSNL-ல் உள்ள 2½ லட்சம் அதிகாரிகளும் ஊழியர்களும் BSNLஐ பாதுகாக்க ஏப்ரல் 21 மற்றும் 22 ஆகிய இரண்டு நாட்கள் தேசபக்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தி உள்ளனர். தமிழகம் முதல் ஜம்மு காஷ்மீர் வரை அனைத்து மாநிலங்களிலும் மிகச்சிறப்பாக இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றுள்ளது. நாடு முழுவதும் 90 சதவிகிதத்திற்கும் மேலானவர்கள் பங்கேற்றுள்ளனர். இது அரசாங்கத்திற்கு மிகப்பெரிய எச்சரிக்கையை விடுத்துள்ளது. இந்திய நாட்டின் பொதுத்துறை நிறுவனமான, பொது மக்களின் சொத்தான BSNLல் பணியாற்றும் ஊழியர்களும், அதிகாரிகளும் மிகச்சிறப்பான சேவையை பொது மக்களுக்கு வழங்க தயாராக உள்ள சூழ்நிலையில், அதனை விரிவு படுத்தவும், சேவையின் தரத்தை மேம்படுத்தவும் தேவையான கூடுதல் கருவிகள் தேவைப்படுகிறது. ஆனால், அரசாங்கம் BSNLக்கு தர வேண்டிய நிதியை தர மறுக்கிறது. BSNL நிறுவனம் திருப்பித்தந்துள்ள BWA ஸ்பெக்ட்ரத்திற்கான கட்டணம் மற்றும் கிராமப்புற சேவைகளால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு அரசாங்கம் தருவதாக ஒத்துக்கொண்ட USO நிதியை முழுமையாக திருப்பித் தருவதில்லை.

அரசாங்கத்தின் ஆதரவோடு செயல்படுகின்ற தனியார் நிறுவனங்களோடு போட்டியில் உள்ள சூழ்நிலையில் BSNLஐ விரிவுபடுத்த அரசு அனுமதி மறுத்து வருவது இந்த நிறுவனத்தை ஒரு நலிவடைந்த நிறுவனமாக மாற்ற அரசாங்கம் முயற்சி செய்கிறது என்பதையே வெளிக்காட்டுகிறது. பொதுமக்களுக்கு சிறந்த சேவை தருவதற்கும், பொதுத்துறை நிறுவனமான BSNLஐ பாதுகாக்கவும் நடைபெற்ற சக்தியான இரண்டு நாள் வேலை நிறுத்தம் அரசாங்கத்தின் தனியார் ஆதரவு முயற்சிகளுக்கு எதிரான மக்கள் உணர்வை வெளிப்படுத்துவதாக இருந்தது.

இந்த வேலை நிறுத்தம் நடைபெறும் கால கட்டத்தில் மத்திய தொலை தொடர்பு அமைச்சரோ அல்லது தொலைதொடர்பு துறை செயலாளரோ பேச்சு வார்த்தைக்கு அழைக்கவே இல்லை. தனியார் நிறுவனங்களோடு பேச்சு வார்த்தை நடத்தி சலுகைகளை அறிவிக்கும் மத்திய அரசு, BSNLல் போராடும் தலைவர்களை அழைத்து பேசாதது கண்டிக்கத் தக்கது.

அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் இந்த போராட்டத்தின் இரண்டாம் நாள் வேலை நிறுத்தத்தில் முதல் நாள் வேலை நிறுத்தத்தைக் காட்டிலும் அதிக அளவிலான ஊழியர்களும், அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர். இந்த இரண்டு நாட்களும், சென்னை நீங்கலான தமிழகம் முழுவதும் உள்ள 2003 தொலைபேசி நிலையங்களும், அனைத்து அலுவலகங்களும் வாடிக்கையாளர் சேவை மையங்களும் செயல்படவில்லை. இதனால் பொது மக்கள் தங்களின் தொலை பேசி பில்களை கட்ட இயலாமலும், செயல்படாத தொலைபேசிகளை சரி செய்ய இயலாமலும், பல இடங்களில் செல் இணைப்பு கிடைக்காமலும் பிரச்சனைகளுக்கு உள்ளானார்கள். இந்த இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தி அமைதியான முறையில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் தமிழகத்தில் உள்ள FORUM OF BSNL UNIONS/

ASSOCIATIONSன் அமைப்பாளர் தோழர் செல்லப்பா மற்றும் தலைவர் தோழர் பட்டாபி ராமன் ஆகியோர் கூட்டாக நன்றி தெரிவித்துக் கொண்டனர். மேலும் இந்த இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தின் காரணமாக பொது மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளை உடனடியாக நாளை (23.04.2015) காலை முதல் உடனடியாக எங்களின் ஊழியர்களும், அதிகாரிகளும் சரி செய்து விடுவார்கள் எனவும் அவர்கள் உத்தரவாதம் கொடுத்துள்ளனர்.

அரசாங்கம் உடனடியாக அகில இந்திய FORUM முன்வைத்துள்ள கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக் கொண்டு பொது மக்களின் சொத்தான BSNLஐ பாதுகாப்பதற்கான அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். FORUM தலைவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும். இல்லையெனில் அடுத்த கட்ட போராட்டம் மேலும் வலுவானதாக நடைபெறும் என FORUM தலைவர்கள் அறிவித்துள்ளனர். எங்களது போராட்டத்தின் காரணமாக ஏற்பட்ட சிரமங்களை பொறுத்துக் கொண்ட சந்தாதாரர்களுக்கும், எங்களின் செய்திகளை வெளியிட்ட பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி நண்பர்களுக்கும் தங்களின் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

நன்றி:-

BSNLல் நடைபெறும் வேலை நிறுத்தம் பற்றியும் BSNLன் புத்தாக்கம் தொடர்பாகவும் பாராளுமன்ற கேள்வி நேரத்தில் திரிபுராவை சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் தோழர் சங்கர் பிரசாத் டத்தா எழுப்பியுள்ளார். அதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. போராடும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் குரல் எழுப்பிய தோழர் சங்கர் பிரசாத் ட்த்தா அவரகளுக்கு மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

| | |
|---|---|
| **(R.பட்டாபிராமன்)** | **(S. செல்லப்பா)** |
| **தலைவர்** | **அமைப்பாளர்** |
| **FORUM** | **FORUM** |